


- வாழ்வோம்

புதையல் 3

தமிழ்-தமிழர், தமிழ்நாட்டிற்காகவும் குரல்கொடுத்த திராவிட இயக்க இதழ்களில் வெளியான, பல்வேறு காலங்களையும் தாண்டி நிலைத்து நிற்கும் சிறப்புமிக்க எழுத்துகளில் இருந்து சில பகுதிகள்...



'பிள்ளை' பிடிக்கிறார்கள்!

பச்சைக்குழந்தைகளிடம் பல்லி ளித்து, 'பாகுமொழி' பேசி, பின்னர் அந்தப் பிள்ளைக் கனியமுதைக் கவர்ந்து செல்வர், பகல் வேஷக்காரர்கள் சிலர். அதற்காக அந்தச் சிசுவை அழைத்து, "கள்வனின் பேச்சுக்கு ஏன் மயங்கினாய்?" என்று கடிந்துகொள்வதை விட, அந்தப் பிள்ளை பிடிக்கும் கயவனைத்தான் நன்றாகக் கண்டிப்பர்; கடுமையான தண்டனையும் வழங்குவர், விவேகம் தெரிந்தோர்!

பிள்ளை பிடிக்கும் அந்தக் கள்வர்கள் நிலையிலேதான் மூன்று வர்ணக் கொடிகொண்டு, ஒரு காலத்தில் நாட்ட வர் நெஞ்சிலெல்லாம் குடிகொண்டிருந்த காங்கிரஸ் இயக்கமும் தற்போது செயலாற்றிவருகிறது. கார்கண்ட மயில் போல மக்களெல்லாம் மகிழ்ச்சியின் வசமாக நின்றனர்; முன்னைய பொதுத் தேர்தலிலே, பாசிச காங்கிரஸின் வாரி சாய் நின்றவரெல்லாம் ஒருவர்பின் ஒருவராய் மண்ணைக் கவ்வியது குறித்து! ஆனாலும், விரைவிலே அந்த நிலைமை மாறிவிட்டது. மக்கள் சக்தி, காறி உமிழ்ந்தோரையும் காலால் மிதித்தோ ரையும் 'கனம்'களாக்கிக் கொக்கரித்து நின்றது, காங்கிரஸ்! சட்டசபைக் கூடத்துள் நுழைவதையும், 'குஷன்' பதித்த மந்திரி நாற்காலியில் ஒரு நிமிஷமாவது உட்காரவேண்டியதையுமே வாழ்க்கையின் இலட்சியமாகக் கருதியவர்கள்தான் எத்தனையோ பேர் இருக்கிறார்களே! அவர்களையெல்லாம் அருகழைத்து, பதவியென்னும் தேங்காய்த் துண்டங்களை வீசி எறிந்து, தன் பக்கம் கவர்ந்துவிட்டது, காங்கிரஸ் - பிள்ளை பிடிக்கும் எத்தர் களைப்போல! பிறந்த வீடாம் தங்கள் தொகுதிக்குள் திரும்பவும் தலைகாட்ட முடியாதே என்பதை மறந்துவிட்ட 'குழந்தை'கள் செல்லவும் காங்கிரஸின் அரவணைப்பிலே இக, பர, சுகமனைத்தையும் ஒருங்கே சுவைத்ததாக மனப்பால் குடித்து நின்றனர்.

உடைமாற்றுதல் போல கட்சி மாறும் இந்தக் கண்ணவான்களின் தொகையைக் குறைத்துக்கொண்டு; இழந்துபோன பெருமையை மீண்டும் நிலைநாட்டிக் கொள்ளும் அவசியத்தை காங்கிரஸ் இன்னமும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. துரோகிகளைப் பெருக்கி, ஜனநாயகத்துக்கே மாபெரும் துரோகம் செய்யும் அவர்களது திட்டத்தை காங்கிரஸ் பொதுக் காரியதரிசி, பலவந்தராய் மேத்தாவே வெளியிட்டி ருக்கிறார்; சுற்றறிக்கை வாயிலாக!

தொண்டு செய்வதொன்றையே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த காந்தியாரும் ஏனைய தலைவர்களும் இருந்த காங்கிரஸ், இன்று துரோகிகளின் துணைகொண்டு வாழவேண்டிய நிலையைப் பாருங்கள்! "காளைமாட்டுப் பொட்டியில் ஓட்டுப் போடாதீர்கள்; மூளியாகிவிட்ட உங்கள் வாழ்வு துலங்க, சுயேச்சையாகிய எனக்கே ஓட்டளியுங்கள்" - என்று மக்கள் மன்றங்களிலே கதறிய வர்கள்; "மாட்டுக்கு ஓட்டளித்தால், கொஞ்சம் பசுமையா இருக்கும் நம் நாடும் பாலையாகிவிடு"மென்று, கையிலே ஓடேந்தி வீடுவீடாய் ஓட்டுப் பிச்சை கேட்டவர்கள்; - காங்கிரஸ் எதிர்த்த இந்த வீராதி வீரர்களெல்லாம் சட்டசபை நுழைந்ததும், மீண்டும் காங்கிரஸோடு கொஞ்சிக் குலாவலாமாம்; அதற்கு, சட்டசபைக் காங்கிரஸின் 4-ல் 3-பங்கு சம்மதம் கிடைத்தாலே போதுமாம்! பொதுமக்களின் சம்மதம் தேவையே இல்லையாம்!

என்ன செய்வது? காட்டெருமைகள் சேற்றிலே உழல்வதைத்தானே இன்பமாக நினைக்கின்றன! காங்கிரஸ் என்னும் சேற்றைப் பூசி மகிழும் துரோகி எருமை களும், அந்த எருமைக் கொட்டடிக்கே அழைக்காமல் வந்துசேரும் சேற்றுத் திரளும், இந்த நாட்டு அரசியல் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன.

"காங்கிரஸோடு சேர்ந்துவிட்டேன்; கட்சியைக் கலைத்துவிட்டேன்" - இந்த அறிக்கைகள் பெருக வழி அமைத்துக் கொடுப்பதற்காகத்தான் இப்போது பலவந்தராய் மேத்தா, காங்கிரஸின் சட்டதிட்டத்தில் புதியதொரு ஷரத்தைச் சேர்த்திருக்கிறார். காங்கிரஸை எதிர்த்து வெற்றிபெற்றவர்களைத் திரும்பவும் காங்கிரஸில் சேர்த்துக்கொள்ளலாமாம்; சிறிதளவும் வெட்கமில்லாமல் சொல்லுகிறார், பலவந்தராய் மேத்தா.

"ஓட்டுச் சாவடி முன்பு, நீ மக்களிடம் எடுத்துச் சொன்ன வாக்குறுதிகள் என்ன? நீ அவைகளையெல்லாம் காற் றிலே பறக்க விட்டுவிட்டு எங்களோடு சேருவது, கண்ணியம் காக்கும் செய லாகுமா?" என்று சிம்மக் குரலெழுப்பி சிறுமதியாளரைத் தட்டிக் கேட்க வேண்டும். காங்கிரஸ் நாகரிகமான அரசியல் கட்சியென இந்நாட்டுச் சரித்திரத்தில் இடம்பெற விரும்பினால், அப்படித்தான் செய்திருக்க வேண்டும். அஃதன்றி, 'பிள்ளை பிடிக்கும்' துட்டனின் நிலையிலே, உனக்கு அந்த உதவி செய்கிறேன்; இந்தப் பதவி தருகிறேன் என்று ஆசை வார்த்தைகள் உதிர்த்து, உதிரிகளையெல்லாம் 'தத்து' எடுக்கும் நிலையை வளர்த்துக்கொண்டே போனால், உலகின் ஏனைய ஜனநாயக விரோதிகளின் முடிவைத்தான் 'இவர்களும்' அடையவேண்டியிருக்கும் என்பதை நம்மால் எச்சரிக்காமல் இருக்க முடியவில்லை.

தசரதபுத்திரனால் கல்லும் காவேரியும், புல்லும் பூமியுமுள்ள அளவு ஆயுசும், சிரஞ்சீவிப் பட்டமும் வழங்கப்பட்ட அந்த விபீஷணனின் ராஜ்ஜியமே இருந்தவிடம் தெரியாமல் அழிந்துவிட்டது. இப்போது, பலவந்தராய் மேத்தா ஆசீர்வதிக்கும் இந்த விபீஷண ராஜ்ஜியம் மட்டுமா நிலைத்து நிற்கப்போகிறது? - வளர்ந்துவரும் மக்கள் சக்தி, விபீஷ்ணர் களுக்கும் அவர் தம் போஷகர்களுக்கும் விரைவில் சரியானதோர் பாடத்தைக் கற்பிக்கத்தான்போகிறது.

(முரசொலி தலையங்கம், 29.10.1954)

● பாரத் ஸ்ரீமன் அழகேசன் ●

கலகக்காரர் கலைஞர் 03



கருப்புக்கொடி காட்டும் போராட்டத்துக்காகத் தொடர் கூட்டங்களை நடத்தியதால், ப்ளூரசி காய்ச்சல் தாக்கி ஆறு மாத காலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டார் முத்தமிழறிஞர் கலைஞர்.

■ எழுத்து: **மகிழவன்,**
ஏஐ உருவாக்கம்: **ஆரிஃப் முகம்மது**

ஃப்ளாஷ்பேக்

தலைவருடன் எனது தாத்தா!



1980-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது, அவிநாசியில் கூட்டணிக் கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் சார்பில், ஆறுமுகத்தை ஆதரித்து பிரச்சாரம் செய்ய வந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்போது, ஒன்றியக் கழகச் செயலாளராக இருந்த என் தாத்தா எஸ்.எம்.ஆர். ராமசாமி, கலைஞருடன் இருந்தபோது எடுத்த படம் இது. ஒருமுறை அவிநாசி நகரச் செயலாளராகவும், ஆறு முறை ஒருங்கிணைந்த அவிநாசி ஒன்றியச் செயலாளராகவும் இருந்தவர். எம்.ஜி.ஆர். அழைத்தும் கட்சி மாறாத கழகக்காரர், என் தாத்தா.



பா.சுதர்சன்

- பா.சுதர்சன்,
அவிநாசி, திருப்பூர்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

20.04.1959

பொதுமக்கள் விருப்பத்துக்கு மாறாகவும் தி.மு.க.வின் அறிவுரையைப் புறக்கணித்தும், சட்டமன்றக் கூட்டத்தை 20.04.1959 முதல் 10 நாட்கள் உதகையில் நடத்த அரசு முடிவெடுத்தது. அதைக் கண்டித்து, 20.4.59 -இல் இருந்து 26.4.59 வரை திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாடெங்கும் கண்டன ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தியது.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900